## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 38/2020 | Date : 25.04.2022 | PW2 |
|---|---|---|
| Name: சந்திரன் | S/o. பஞ்சநாதம் | |
| Evidence Recorded Time: 04.41 P.M. to 05.20 P.M | | |

**2-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

வழக்கு வாதி என் தாயார். நடைபாதையில் வழிதடம் கேட்டும் பட்டாவில் உள்ள அளவுகள் தவறாக இருப்பதால் அதை சரிசெய்து கொள்வதற்காகவும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். சர்வே எண்.158/1A நிலத்திற்கு வழக்கு போட்டுள்ளோம். அந்த நிலமானது 1.35 ஏக்கர் நிலமாக பட்டாவில் தவறாக உள்ளது. ஆனால் 1.57 ஏக்கர் கொண்ட நிலமாகும். அந்த நிலமானது எனது அம்மாவின் அம்மாவின் மூலம் கிடைத்தை சொத்தினை எனது பாட்டி எனது அம்மாவிற்கு தானசெட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார். தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் எவ்வளவு நீளம் மற்றும் அகலம் உள்ள நடைபாதையையும், சக்குபந்தி பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் பாதை மட்டும் உள்ளது நீளம், அகலம் குறிப்பிடப்படவில்லலை. சக்கபந்தியும் குறிப்பிடப்படவில்லை. எனது தாயார், கந்தம்மாள் மற்றும் கந்தம்மாள் மகன்கள் இருவர் பெயரிலும், வட்டாட்சியர் பெயரிலும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். அலமேலு என் தயாரின் தங்கை ஆவார். இதே சர்வே எண்ணில் அலமேலு தங்கம்மாள் என்பவருக்கு ஒரு கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அதில் சக்குபந்தி தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் 1973-ம் வருடத்திய ஆவணம் என்றால் சரிதான். 1973-ம் ஆண்டு முதல் இன்று வரை சக்குபந்தி தவறுதலாக காட்டப்பட்டுள்ளது என்பதை காட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் என் தகப்பனார் நடவடிக்கை எடுத்தார். நான் வனவாசியில் கடந்த 25 ஆண்டுகாலமாக குடியிருந்து வருகிறேன். இதே சர்வே எண்ணில் 21 1/2 செண்ட்டிற்கு அலமேலு அம்மாள் சம்மதபத்திரம் எழுதிக்கொடுத்துள்ள விவரம் எனக்கு இன்றுவரை தெரியாது. கடந்த 25 ஆண்டுகளாக வசித்து வரும் நிலையில் இதே சர்வே எண்ணில் தங்கம்மாள் மற்றும் அவரது மகன்கள் நிலத்தை அனுபவித்து வரும் விவரம் எனக்கு தெரியும் என்றால் 2008-ம் ஆண்டில்தான் தெரியும். 2008-ம் ஆண்டே எனக்கு நிலம் குறைவாக இருக்கிறது என்ற விவரம் தெரியவந்தது என்றால் சரிதான். 2008-லேயே தெரிவந்தது என்றாலும் இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரை அமைதியாக இருந்துவிட்டோம் என்றால் சரியல்ல. அலமேலுவிடம் கிரையம் பெற்ற தங்கம்மாள் அவருடைய மகன்களுக்கு வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்டு

இந்திரஜித்திற்குபாகம் ஒதுக்கப்பட்டு இன்று வரை இந்திரஜித் தான் அந்த நிலத்தை ஓட்டி வருகிறார் என்றால் சரியல்ல. இப்போது வரை அந்த நிலத்தை யாரும் ஓட்டவில்லை சும்மாதான் இருக்கிறது. சாட்சி தற்போது பிரதிவாதிகள் கிரையம் பெற்ற சொத்தை அவர்கள்தான் ஓட்டி வருகிறார்கள். இந்திரஜித் ஓட்டிவருகிறார் என்றால் அவரை நான் பார்க்கவில்லை. இந்திரஜித் மீது எதற்காக வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் அவர்தான் கேட்டை பூட்டினார். தங்கம்மாளும், பொன்னுவேலும் எங்களுக்கு எந்த தொந்தரவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். கேட் போட்ட நிலமானது சுற்றிலும் கம்பிவேலி போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மெயின் கேட்டிற்கு வடக்கு புறத்தில் ஒரு சிறிய கேட் உள்ளது என்றால் வழக்கிற்கு பிறகு அது தற்காலிகமாக போடப்பட்டது. அந்த சின்ன கேட் அருகில்தான் அப்பு முதலியார் சமாதி உள்ளது என்றால் சரிதான். சின்னகேட் அருகில் உள்ள சமாதி வழியாக எங்கள் நிலத்திற்கு நேராக போகமுடியுமா என்றால் போகமுடியாது. அப்பு முதலியார் சமாதி இந்திரஜித் நிலத்தில் உள்ளது என்றால் இந்திரஜித் நிலத்தில்தான் உள்ளது. ஆனால் தவறாக பெறப்பட்ட பட்டாவின் அடிப்படையில் அந்த இடத்தில் உள்ளது. தென்னந் தோப்பை சுற்றிலும் எப்போது கம்பிவேலி அமைத்தார் என்றால் நான்கைந்து ஆண்டுகள் இருக்கும். இந்திரஜித் தென்னந்தோப்பிற்கு மேற்கு பக்கத்தில்தான் எங்கள் நிலம் உள்ளது என்றால் சரிதான். இந்திரஜித் நிலத்தில் உள்ள மெயின் கேட்டை தவிர வேறு எந்த வழியில் எங்கள் நிலத்திற்கு செல்லமுடியும் என்றால் செல்லமுடியாது. சின்னகேட் வழியாகத்தான் நாங்கள் நிலத்திற்கு சென்றுவந்தோம் என்றாலும் வழக்கிற்கு பிறகுதான் பெரியகேட்டை உரிமை கோருகிறோம் என்றால் சரியல்ல. என் தாயார் இந்த வழக்கில் மெயின் கேட்டிலிருந்து எத்தனை அடி நீள, அகலத்தில் சென்று வந்தார் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. எங்கள் நிலத்திலும், இந்திரிஜித் நிலத்திலும் எலக்ட்ரிக் டவர் லைன் செல்கிறது. டவர் லைன் செல்வதால்தான் எனது பாட்டி அலமேலுவிற்கு 21 1/2 செண்ட் நிலத்தை அதிகமாக கொடுத்தார் என்றால் அவ்வாறு இல்லை. அலமேலு அம்மாவிடம் பாதை சம்மந்தமாக நாங்கள் எதுவும் கேட்கவில்லை. அவர் நிலத்தை விற்றபின்னிட்டும் அவரிடம் பாதை பற்றி கேட்வில்லை என்றால் பாதை சரிபாதியாக இருந்த காரணத்தினால் கேட்வில்லை. நான் வனவாசி பேரூராட்சி முன்னாள் தலைவர் என்றால் சரிதான். அந்த நிலத்தில் பிவிசி பைப் கம்பெனி வைப்பதற்காகத்தான் நான் தொட்டி கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் பைப் லைன் சமாதி வழியாக போட்டுள்ளேன். இந்த வழக்கை தாக்கல் செய்த பின்னிட்டு நானும் என் தாயாரும் இந்திரஜித் அனுபவத்திற்கு இடையூறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. அதனால் தான் இந்திரஜின் அசல் வழக்கு எண்.117/2020 என்ற வழக்கை என் மீதும், என் தாயார் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் அந்த வழக்கு பொய்யாகும். தங்கம்மாள், இந்திரஜித் ஆகியோர் 1973-ம் ஆண்டு கிரையம் பெற்ற நாள் முதல் 21 1/2 செண்ட்

நிலத்தை எந்த விதமான இடையூறும் இன்றி அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் காலங்கடந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு எதிராக பாதை கேட்பதற்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்றாலும் என் தாயார் தாக்கல் செய்த வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

**<u>4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

இந்த வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் என் அம்மாவோடு சேர்ந்து நான் தாக்கல் செய்துள்ளேன். சொத்தில் அளவு குறைவு சம்மந்தமாக எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 2008–ல் தெரியவந்தது. அது சம்மந்தமாக மேல்முறையீடு எதுவும் செய்துள்ளேனா என்றால் எனது தகப்பனார் செய்துள்ளார். அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். எந்த ஆவணங்களையும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகள் முறையாக விசாரணை செய்து பட்டா வழங்கியுள்ளார்கள் என்றும் பொய்யாக 4, 5 பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. 2008–ல் தெரியவந்த நிலத்தின் அளவு குறைவுகளை தற்போதுதான் கேட்டு 4, 5 பிரதிவாதிகளை அலைக்கழிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் உரிய ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டதாலும் முறையான விசாரணை நடைபெற்றபின்னர்தான் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகள் யாருக்கும் கைப்பாவையாக செயல்படக்கூடியவர்கள் அல்ல என்றால் சரியல்ல. பட்டா சம்மந்தமாக மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யாமல் இந்த வழக்கில் 4, 5 பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஓம்/–PW2

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஓம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.